மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) காட்டுப் புத்தூர் வாய்க்காலை புதுப்பித்து சீரமைக்கும் திட்டம் பொதுப் பணித் துறை அலுவலர்களின் ஆய்வில் உள்ளது. இத்திட்டம் அரசு பரிசிலனை செய்யும் கட்டத்தை இன்னும் அடையவில்லை.

திரு. சி. க. வடிவேலு: இந்தத் திட்டம் எப்போது நிறை வேற்றப்படும்? அதன் மதிப்பீடு என்ன என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது ஆய்வில்தான் இருக் கிறது. அரசின் பரிசிலனைக்கு வந்து நிதி ஒதுக்கீடு செய்கிறபோது தான் மதிப்பீடு தெரியும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: முன்பு குடிமராமத்து இருந்த காலத்தில் ஆண்டுதோறும் எல்லா வாய்க்கால்களும் சீரமைக்கப்பட்டன. தற்போது அந்த வேலை ஒழுங்காக நடை பெறவில்லை. அப்படியின்றி வருடாவருடம் தமிழகத்தில் உள்ள வாய்க்கால்கள் அனைத்தையும் சீரமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேள்வி காட்டுப்புத்தூர் வாய்க்காலைப் பற்றியது. குடிமராமத்து பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

நாவக்கொல்லை கிராமத்தில் புதிய ஏரி.

*426 வினா—**திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், நாவக்கொல்லை கிராமத்தில் புதிய ஏரி கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1973 நவம்பர் 27]

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கிறது. ஆகவே அடுத்த ஆண்டாவது இந்தத் திட்டத்தை எடுத்துச் செயல்படுத்த முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது சிக்கனமற்ற திட்டங் களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்வதைப்பற்றி இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.

கருவாட்டுப்பாறையில் குட்டை அமைப்புத் திட்டம்.

* 427 வினு—**திரு. வீ. செல்லதுரை :** மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

ஓமலூர் வட்டம், க.குட்டப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த "கருவாட்டுப்பாறை" பீட்டை சேர்ந்த பள்ளத்தில் "குட்டை" அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை. க.குட்டைப் பட்டியில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறைய பாண்டு ஸ்கீம் மூலமாகக் குளங்கள் அமைத்திருப்பதன் மூலம் அங்கே ஓரளவு குடிதண்ணீர் கிடைக் கிறது. அதைப்போல மிக வறண்ட பகுதியாகிய வடாற்காடு மாவட்டத்திலும் பாண்டு ஸ்கீமைச் செயல்படுத்த முன்வருவார் களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோயம்புத்தூர் மாவட்டம் குட்டை திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். இன்னமும் அங்கே குடி தண்ணீர் பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

வேலம்பாளையம் பேரூராட்சி சாலைகள்.

* 428 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், 15 வேலம்பாளையம் பேரூராட்சி மன்றத்திற்கு உட்பட்ட சாலைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று திருப்பூர் தொகுதி பேரவை